KVKs 1974-2024
कृषि विज्ञान केन्द्र Krishi Vigyan Kendras Serving Farmers ICAR
ATARI HYDERABAD ZONE-X
இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம்
வேளாண் அறிவியல் நிலையம்
ஈரோடு மாவட்டம்
MYRADA
உழவர் மலர்
மலர் : 115
அக்டோபர் - டிசம்பர் 2025

## நெல் வயலில் பாசி வளர்ச்சியை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள்

### பாசி வளர்ச்சியின் தாக்கம்

நெல் சாகுபடியில் விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று வயலில் பாசி (Algae) படர்வது ஆகும். தண்ணீர் தேங்கும் நெல் வயல்களில் சூரிய ஒளி, அதிக ஈரப்பதம் மற்றும் உரங்களிலிருந்து வெளியாகும் நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்களால் பாசி வேகமாக பெருகுகிறது. இதனால் நெல் பயிருக்கு வேண்டிய சூரிய ஒளி மற்றும் ஊட்டச்சத்துக்கள் கிடைக்காமல் போகும். மகசூல் கணிசமாக குறையும். எனவே பாசி வளர்ச்சியை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துவது மிகவும் அவசியம்.

### 1. பயிரிடல் முறைகள்

பாசி வளர்ச்சியை தடுக்க சரியான வயல் மேலாண்மை மிக முக்கியம்.

**நீர் மேலாண்மை** - AWD முறை (Alternate Wetting and Drying): நெல் வயலில் 2 முதல் 4 செமீ ஆழம் மட்டுமே தண்ணீர் நிறுத்துவது அவசியம். தண்ணீர் தேங்கி அசையாமல் இருக்கும்போது பாசி வளர்ச்சிக்கு சாதகமான சூழல் உருவாகும். AWD முறையில் வயலை மாற்றி மாற்றி நனைத்து உலர விடுவதன் மூலம் பாசி படர்வதை தவிர்க்கலாம்.

**வயல் சமன்படுத்துதல்:** வயல் சரியாக சமன்படுத்தப்படாவிட்டால் சில இடங்களில் தண்ணீர் தேங்கும். இதனால் அந்த பகுதிகளில் பாசி அதிகமாக வளரும். லேசர் லெவலிங் அல்லது பாரம்பரிய முறையில் வயலை சமன் செய்வதும், சரியான வடிகால் வசதி அமைப்பதும் அவசியம்.



**நடவுக்கு முன் கரிம உரமிடல்:** நடவு செய்வதற்கு குறைந்தது 15 -20 நாட்கள் முன்பே மண்புழு உரம் அல்லது தொழு உரம் இடவேண்டும். நடவுக்கு நெருக்கமான நேரத்தில் உரமிட்டால் சத்துக்கள் திடீரென வெளியாகி தண்ணீரில் கலந்து பாசி வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

### 2. இயந்திர முறைகள்

**கைமுறை அகற்றல்:** பாசி தட்டுகள் உருவான உடனே மூங்கில் குச்சி அல்லது கம்பு கொண்டு கிளறி அகற்றலாம். இது மிக எளிய முறை. வயலில் பாசி பரவத் தொடங்கும் ஆரம்ப நிலையி-லேயே இம்முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**தண்ணீர் மேற்பரப்பு கிளறல்:** தண்ணீரின் மேற்பரப்பில் படர்ந்திருக்கும் பாசி படலத்தை (Algal Crust) லேசான சீரை அல்லது ஹாரோ கொண்டு கிளறி உடைக்கலாம். இதனால் பாசி ஒளிச்சேர்க்கை செய்யும் திறன் குறைந்து வளர்ச்சி தடைபடும்.

### 3. இரசாயன முறைகள்

இரசாயன முறை என்பது இறுதி தேர்வாக மட்டுமே கையாளப்பட வேண்டும். மற்ற முறைகள் பலன் தராத நிலையில் மட்டுமே பயன்படுத்தவும்.

**தாமிர சல்பேட் (Copper Sulphate) பயன்பாடு:**

- அளவு: 5 கிலோ/ஹெக்டர்
- தண்ணீரில் கரைத்து வயலில் சீராக தெளிக்கவும்
- காலை நேரத்தில் தெளிப்பது சிறந்தது
- தெளித்த பின் 3-4 நாட்களுக்கு வயலில் தண்ணீரை வெளியே விடாதீர்கள்

**எச்சரிக்கை:** தாமிர சல்பேட் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தினால் மண்ணின் நுண்ணுயிர்களுக்கும் மண்புழுக்களுக்கும் தீங்கு விளைவிக்கும். எனவே பரிந்துரைக்கப்பட்ட அளவை மட்டுமே பயன்படுத்தவும்.

### 4. ஊட்டச்சத்து மேலாண்மை

பாசி வளர்ச்சியின் முக்கிய காரணங்களில் ஒன்று நீரில் கலக்கும் அதிகப்படியான நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்கள்.

**தவிர்க்க வேண்டியவை:**

- யூரியா மற்றும் DAP உரங்களை தேவைக்கு அதிகமாக இடுவதை தவிர்க்கவும்
- ஒரே நேரத்தில் அதிக அளவு உரம் இட்டு தண்ணீரில் கலக்கிவிடாதீர்கள்

**பின்பற்ற வேண்டியவை:**

- மண் பரிசோதனை அறிக்கையின் படி மட்டுமே உரமிடவும்
- நெல்லுக்கு பிரிய அளவுகளில் உரமிடுவது சிறந்தது - நடவு, தூர் கட்டும் தருணம், கதிர் உருவாகும் தருணம் என மூன்று கட்டங்களில் பிரித்து இடவும்
- ஜீவாமிர்தம் போன்ற இயற்கை திரவ உரங்களை பயன்படுத்துவதன் மூலம் இரசாயன உர தேவையை குறைக்கலாம்.

சரியான நீர் மேலாண்மை, வயல் சமன்படுத்துதல் மற்றும் உரமிடல் முறைகளை கடைபிடிப்பதன் மூலம் பாசி வளர்ச்சியை இயற்கையாகவே கட்டுப்படுத்தி நெல்லின் மகசூலை பாதுகாக்கலாம்.

## பாக்கு சாகுபடியில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை

### காய் அழுகல் நோய் / மொட்டு அழுகல்:

மழைக்காலங்களில் காய்கள் அதிகமாக கொழிவதே இதன் முக்கிய அறிகுறி ஆகும்.

**அறிகுறிகள்:**



- ♦ கதிர் இலைகள் பச்சை நிறத்திலிருந்து பழுப்பு மஞ்சள் நிறத்திற்கு மாறும்
- ♦ வெளி இலைகள் மஞ்சள் நிறமாக மாறி ஒன்றன்பின் ஒன்றாக தண்டிலிருந்து உதிர்ந்துவிடும்
- ♦ பாதிக்கப்பட்ட இளம் இலை சுருள் எளிதில் தொட்டவுடன் உதிரும்
- ♦ நீர் கோர்த்த புள்ளிகள் மற்றும் சிராய்ப்புகள் பூவிதழ்களின் அருகில் காணப்படும்
- ♦ மரங்களிலிருந்து முதிராத கொட்டைகள் அழுகி அதிகளவில் உதிர்தல்
- ♦ பாதிக்கப்பட்ட மரங்களின் உச்சியில் பெரும்பாலும் உலர்ந்த இலைகள் மற்றும் கிளைகள் இருக்கும்
- ♦ பாதிக்கப்பட்ட கொட்டைகள் விழுந்து வெள்ளை நிற பூஞ்சை படலம் வளர்ந்திருக்கும்
- ♦ இலைகள் மற்றும் வளரும் மொட்டுகள் அழுகுவதன் காரணமாக மரமே இறக்க நேரிடும்

**கட்டுப்பாடு:**

- ⇒ பாதிக்கப்பட்ட மரங்களை அழித்தல் மற்றும் உதிர்ந்த கொட்டைகளை சேகரித்து எரித்தல்
- ⇒ பாதிக்கப்பட்ட பழக்குலைகளை நீக்கிவிட்டு 1 சத போர்டோ கலவையை குலைகளில் 45 நாட்கள் இடைவெளியில் குறைந்தது இரண்டு முறை தெளிக்க வேண்டும். பருவ மழை தொடங்கிய உடனேயே முதல் தெளிப்பும் மழை அதிக நாள் நீடிப்பின் மூன்றாவது தெளிப்பும் அவசியமாகிறது.
- ⇒ பாலித்தின் பைகளினால் குலைகளை மூடுவதன் மூலமும் இந்நோயை முழுமையாக கட்டுப்படுத்த முடியும்.

### குருத்து மற்றும் கொண்டை அழுகல்

இந்நோய் பருவ மழை காலம் தொடங்கி அடுத்து வரும் பனிக்காலம் அதாவது பிப்ரவரி வரை தொடரும்.

**அறிகுறிகள்:**

- ♦ இந்நோயினால் முதலில் குருத்துக்கள் மஞ்சள் நிறமாகி பின் அழுகத் தொடங்கும்
- ♦ வளரும் நுனியும் அதனை சுற்றியுள்ள திசுக்களும் அழுகி ஒருவித துர்நாற்றம் வீசும்
- ♦ இந்நோயின் அறிகுறி தென்மேற்கு மழை பருவங்களில் வெளிச்சுற்று ஓலைகளின் இலையடி உறைகளில் தோன்றிபின் படிப்படியாக வளர்ந்து நுனி நோக்கி செல்லும்
- ♦ நோய் கடுமையாக தாக்கும் பட்சத்தில் மரம் ஒட்டுமொத்தமாக இறந்து விடும்.

**கட்டுப்பாடு:**

- ⇒ நோய் தாக்கிய மரங்களில் பாதிக்கப்பட்ட திசுக்களை நீக்கி காயங்களில் போர்டோ கலவை தடவ வேண்டும்.
- ⇒ நோய் தாக்கிய மரங்களை சுற்றியுள்ள நோய் தாக்கப்படாத மரங்களிலும் 1 சதம் போர்டோ கலவையை தெளிக்க வேண்டும்.

### மஞ்சரி நுனிக்கருகல் மற்றும் டொட்டு உதிர்தல்

**அறிகுறிகள்:**



- ♦ இந்நோய் விரைவில் ஆண் மலர்கள் மற்றும் தண்டில் இறங்கு முகமாக பழுப்பு நிறத்தில் திட்டுதிட்டாக தோன்றும்
- ♦ இந்நோய் தண்டு முழுவதும் ஏற்படும் போது தண்டு வாடிவிடும். இந்நோய் தாக்கப்பட்ட பெண் மலர் பூங்கொத்து முழுவதும் பின்னோக்கி காய்ந்துவிடும்
- ♦ பூஞ்சை தாக்கப்பட்ட பழத்தில் நிறமாற்றமடைந்து பொது மைய வளையம் தோன்றும்
- ♦ இந்நோய் பெரும்பாலும் வறண்ட வானிலை நிலவும் போது கடுமையாக இருக்கும் (பிப்ரவரி - மார்ச்)

**கட்டுப்பாடு**

- ⇒ மஞ்சரியில் உள்ள பெண் பூக்கள் மலரத் தொடங்கும்போது இண்டோ.ஃபில் எம் 45 (3 கிராம்/லிட்டர்) அல்லது டைத்தேன் இஸட் 78 (4 கிராம்/லிட்டர்) என்ற பூஞ்சாணக் கொல்லியை தெளிக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து 25 நாட்களில் இரண்டாவது முறையும் அதே அளவு தெளிக்க வேண்டும். முழுவதும் பாதிக்கப்பட்ட பூங்குலைகளை நீக்கி எரித்து விடுவதன் மூலம் இந்நோய் பரவாமல் தடுக்கலாம்
- ⇒ 0.25% காப்பர் ஆக்ஸிகுளோரைடு (அல்லது) மாங்கோசெப். 0.2% தெளிக்க வேண்டும்.

## மல்பெரி சாகுபடியில் பூச்சி மேலாண்மை

ஈரோடு மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலானது மிகவும் பிரசித்தி பெற்ற தொழிலாக விளங்கு வருகிறது. அத்தகைய பட்டுப்புழு தொழிலில் புழுக்களின் உணவிற்காக மல்பெரி செடியானது சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இத்தகைய மல்பெரி செடியின் வளர்ச்சியை மற்றும் இலைகளின் தரத்தை குறைப்பதில் பூச்சிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இதனால் பட்டுப்புழு தொழிலானது பெரும் சரிவினை சந்திக்க நேரிடுகிறது. எனவே மல்பெரி செடியினை தாக்கும் பூச்சிகளை கண்டறிந்து அவற்றின் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த வேண்டும்.

மல்பெரி செடியினை தாக்கும் பூச்சிகளில் மிகவும் முக்கியமாக விளங்குபவை மாவுப்பூச்சி மற்றும் இலை பிணைக்கும் புழு ஆகும்.

**மாவுப்பூச்சி:**

வெள்ளையாக பஞ்சுபோல் படர்ந்த முட்டைகளுடன் கூடிய இப்பூச்சிகள் கூட்டமாக இலையின் நரம்புகள், இளம் தண்டுகளில் பரவி சேதாரத்தை ஏற்படுத்தும். இவை அவற்றின் சாறினை உறிஞ்சுவதால் இலைகள் சிறுத்து மஞ்சள் நிறமாகி



பின்னர் உதிர்ந்து விடுகின்றன. இப்பூச்சிகள் வெளியேற்றும் தரவத்தை உண்ண கறுப்பு எரும்புகள் கூட்டமாக செல்வதை காணலாம். இப்பூச்சிகள் உடலில் மெல்லிய மாவு போன்ற படலம் சூழ்ந்திருக்கும். இப்பூச்சிகளை கட்டுப்படுத்த அசிரோபேகஸ்ப்பாயே எனும் ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 250 வீதம் பாதிக்கப்பட்ட வயல்களில் வெளியிட வேண்டும். பல்வேறு களைச் செடிகளையும் இப்பூச்சிகள் தாக்கக்கூடியவை, எனவே மல்பெரி சாகுபடி செய்யும் பகுதிகளில் உள்ள களைகளை அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும். மேலும் தாக்குதல் அதிகரிக்கும் பட்சத்தில் வேப்ப எண்ணெய் கரைசலை 3 சதவீதம் அளவிற்கு தேவையான நீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

## பட்டுபுழுவியல் சார்ந்த தொழில்முனைவோருக்கான வாய்ப்புகள்

பட்டுவளர்ப்பு என்பது தொழில்முனைவோருக்கான பல வாய்ப்புகளை வழங்கும் ஒரு வேளாண் சார்ந்த தொழில் ஆகும். இவற்றில் மல்பெரி மரக்கன்றுகள் வளர்த்தல், பட்டுப்புழு முட்டை உற்பத்தி மற்றும் பட்டுசேலை நெசவு, பட்டு மற்றும் பட்டுக்கூடு சார்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி போன்ற தொழில்முனைவோருக்கான வாய்ப்புகள் நிறைந்துள்ளன.



மேலும் மல்பெரி பழங்களில் இருந்து பல்வேறு மதிப்புக்கூட்டப்பட்ட ஊட்டச்சத்து உணவு பொருட்களும் தயாரித்து விற்பனை செய்யலாம். மல்பெரி பழங்களில் முக்கிய ஊட்டச்சத்து பண்புகள் நிறைந்துள்ளன. இவற்றிலுள்ள ஆன்டி ஆக்சிடண்டுகள் உடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் உறுப்புகளை (Free radicals) எதிர்த்து போராடி செல்களின் சேதத்தை தடுக்கின்றன. பழங்களுக்கு அடர் நிறத்தை வழங்கும் ஆன்தோசயனன்கள் இதய ஆரோக்கியத்திற்கும் புற்றுநோய் தடுபிற்கும் உதவுகின்றன. இவற்றிலுள்ள பாலிபீனால் சேர்மங்கள் அழற்சியை குறைக்கவும் ஆக்ஸினேற்ற அழுத்தத்தை கட்டுப்படுத்தவும் உதவுகின்றன. வைட்டமின் சி என்ற உயிர்ச்சத்து நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது. நார்ச்சத்துக்கள் செரிமானத்திற்கு உதவுகின்றன.

மல்பெரி பழங்களிலிருந்து மல்பெரிஜாம், ஸ்குவாஷ், உடனடி தயார்நிலை பானம் (RTS), மல்பெரி மிட்டாய், பழபார், பழக்கூழ், உலர் மல்பெரி, பழத்தூள் மற்றும் பழத்தேநீர் போன்ற மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்து சந்தைப்படுத்தலாம்.

பட்டுக்கூடிலிருந்து பல்வேறு கைவினைப் பொருட்களான அலங்கார மாலையானது பல்வேறு அளவுகளில் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சிகை அலங்காரங்களில் பயன்படுத்தப்படும் கிளிப்புகள் பல்வேறு வண்ணங்களில் தயாரிக்கலாம். மேடை மற்றும் மேஜை அலங்காரப் பொருட்களான பூங்கொத்து, பூஜாடி, பொம்மை போன்ற மதிப்புக்கூட்டு கைவினைப் பொருட்கள் தயாரிக்கலாம். செயற்கை மற்றும் இயற்கை பொருள்கள் சார்ந்த சாயங்களை கொண்டு பல்வேறு நவீன வடிவங்களில் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்து உள்நாடு மற்றும் வெளி நாடுகளுக்கு சந்தைப் படுத்தி வருமானம் ஈட்டலாம்.

## கரும்பு சாகுபடியில் பயிர் கழிவு தூளாக்கும் தொழில்நுட்பம்

ஈரோடு மாவட்டத்தில் கரும்பு சாகுபடியானது 22,335 ஹெக்டர் அளவில் செய்யப்படுகிறது. முக்கியமாக கரும்பு வருவாய் தரக்கூடிய பயிராக இருக்கின்றது, கரும்பு அறுவடை செய்த பிறகு வயலில் கரும்பு தோகை அதிகளவில் இருக்கின்றன. தோகையை வயலில் இருந்து வெளியேற்ற அதிக செலவினம் மேற்கொள்ள உள்ளதால் பெரும்பாலான விவசாயிகள் வயலிலேயே தீ வைத்து விடுகின்றனர். இதனால் காற்று மாசு அடைவதால் நச்சுப் புகையும், நுண் துகள்கள் காற்றில் கலந்து சுவாச பிரச்சினைகள், நுரையீரல் பாதிப்பு, கண் மற்றும் தோல் ஆரோக்கிய சீர்கேடுகள் உண்டாகின்றன. மேலும் காற்று மாசு-பாட்டினால் அதிகளவு கார்பன்டை ஆக்சைடு (Co2), மீத்தேன், கார்பன் மோனாக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு மற்றும் சல்பர் டை ஆக்சைடு போன்ற நச்சு வாயுக்கள் வெளியேறு-கிறது. மண்ணில் உள்ள நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்ற பேரூட்ட சத்துக்கள் குறைந்து நுண்ணுயிர்கள் அழிந்து மண் வளம் குறைகிறது. மேலும் வெப்பமயமாக்கலுக்கு வழி வகுக்கிறது. மறுதாம்பு பயிர் வளர்ச்சி பெறுவதற்கு கால தாமதம் ஏற்படுகிறது.

இதனை தவிர்க்க நிலத்தில் உள்ள கரும்புத் தோகையினை இயந்திரத்தைக் கொண்டு தூளாக்கி பரப்பப்படுவதால் எளிதில் மக்கச் செய்வதுடன் ஈரப்பதம் ஆவியாவதைத் தடுத்தும் தண்ணீர் தேவையை 12 முதல் 15 சதவீதம் குறைக்கின்றது. மேலும் களைகள் சூரிய ஒளி படாமல் தடுத்து முளைப்பதை கட்டுப்படுத்துகிறது. தோகை மக்கும்போதோ மண்ணில் உள்ள இயற்கை கார்பனை கிரகித்து நுண்ணூட்டச் சத்துக்களை அதிகரிக்க



செய்து மண் வளம் மேம்பாடு அடைய உதவுகிறது. இதனால் பயிரின் வேர் வளர்ச்சி துரிதப்படுத்தி பயிர் வளர உதவுகிறது. மேலும் களைக்கொல்லி, கூடுதல் உரத்தேவையை குறைத்து சாகுபடி செலவு குறைகிறது. இம்முறையை பின்பற்றுவதால் நீண்ட கால கரும்பு சாகுபடிக்கு வழிவகுக்கிறது.

## மழைக்காலங்களில் கால்நடைகளின் பராமரிப்பு தொழில்நுட்பங்கள்



விவசாயத்தின் ஓர் அங்கமாக கால்நடை வளர்ப்பு அமைந்துள்ளது. விவசாயிகள் மாடு, எருமை, வெள்ளாடு, செம்மறியாடு மற்றும் நாட்டுக்கோழி போன்றவற்றை வளர்த்து வருகின்றனர். எனவே கால்நடைகள் நல்ல முறையில் வளர அவற்றை சீரற்ற கால நிலையிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொரு விவசாயி-களின் கடமையாகும். சீரற்ற காலநிலை மாறுபாட்டால் கால்நடைகளின் உடல்நிலை பாதிக்கப்பட்டு அவற்றின் உற்பத்தித்திறன் குறைகிறது. கடுமையான காற்று, மழை அல்லது ஆலங்கட்டி மழை போன்றவற்றிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க தரமான தங்குமிடம் தேவைப்படுகிறது. கால்நடை வளர்ப்போர் மழைக்காலங்களில் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளையும் இந்த இதழில் காண்போம்.

**கசியும் கொட்டகை / கூரைகள் :-**

கால்நடை கொட்டகையில் மழைநீர் கசிவதால் கால்நடைகளின் நலன் பாதிக்கப்படுகிறது. அதிக மழைநீர், கால்நடைகளின் சிறுநீர் மற்றும் சாணம் போன்றவற்றின் மூலம் தரையின் ஈரப்பதம் அதிகரித்து மண்ணில் அம்மோனியாவின் செறிவு அதிகமாகிறது. இதனால் கால்நடைகளுக்கு கண் எரிச்சல், சுவாசக்கோளாறுகள் போன்ற பாதிப்புகள் ஏற்படுகிறது. மேலும் கால்நடைகளின் கால் குளம்புகள் மிருதுவாகி நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

**தீர்வுகள் :** கொட்டகையின் மேற்பகுதியில் ஏற்படும் நீர்கசிவுகளை சீரமைத்து தரைப்பகுதியினை வறண்ட நிலையில் வைப்பது அவசியம். மழை சாரலின் பாதிப்பு ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை (பாலித்தீன் விரிப்புகள்) மேற்கொள்ள வேண்டும். கொட்டகை அமைக்கும் பொழுது தரையின் அமைப்பு சரியான அளவில் சரிவாக அமைக்கப்பட வேண்டும் (40 அடிக்கு 1 அடி சரிவு என்ற அளவில்). இதன் மூலம் கால்நடைகளின் கழிவுகளை எளிதில் அகற்றி தரையினை வறண்ட நிலையில் வைத்துக்கொள்ளலாம்.

**ஒட்டுண்ணிகளின் தாக்கம் :-**

மழைக்காலங்களில் கால்நடைகளில் ஈக்கள், கொசுக்கள், தெள்ளுப்பூச்சிகள் மற்றும் உண்ணிகளின் தாக்கம் அதிகமாக காணப்படும். இதனால் கால்நடைகள் ஓய்வின்றி காணப்படும். மேலும் முடி உதிர்தல், இரத்த சோகை ஏற்பட்டு உண்ணிக்காய்ச்சல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. அதிக ஒட்டுண்ணி தாக்கத்தால் கால்நடைகள் இறக்க நேரிடலாம்.

**தீர்வுகள் :** பண்ணைகளில் நீர் தேக்கம் இல்லாமல் இருப்பது அவசியம். ஈக்கள், கொசுக்களை கட்டுப்படுத்த சைபர்மெத்ரின் மருந்தை 2 மில்லி அளவு எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் (குறிப்பு : தீவனக்கிடங்குகள் மற்றும் பசுந்தீவனங்கள் மேல் தெளிப்பதை தவிர்க்கவும்). கால்நடை மருத்துவரின் அறிவுரைப்படி ஊசி மூலம் மருந்து செலுத்தி உண்ணிகளை கட்டுப்படுத்தலாம். கால்நடைகளுக்கு சீரான இடைவெளியில் குடற்புழு நீக்கம் செய்தல் அவசியம்.

**தீவன மேலாண்மை :-**

மழைக்காலங்களில் பசும்புற்கள் மற்றும் தீவனப்பயிர்களின் நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்து அதிக அளவில் இருப்பதால் கால்நடைகளில் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு அதன் உற்பத்தி திறன் பாதிக்கப்படுகிறது. அதிக ஈரப்பதத்தினால் அடர்தீவனங்களில் பூஞ்சை தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது.

**தீர்வுகள் :** பசும்புற்கள் தீவனப்பயிர்களை உலர வைத்தபின் அல்லது உலர்தீவனத்துடன் கலந்து கால்நடைகளுக்கு அளிக்கலாம். அடர்தீவனங்களை தகுந்த முறையில் ஈரப்பதம் அதிகரிக்காமல் பாதுகாப்பது அவசியம். பூஞ்சை தொற்று ஏற்பட்ட அடர்தீவனங்களை கால்நடைகளுக்கு கொடுப்பதை தவிர்க்கவும்.

**நோய் மேலாண்மை :-**

அதிக ஈரப்பதத்தின் மூலம் நோய் தாக்கும் நுண்ணுயிரிகளின் (பாக்டீரியா) உற்பத்தி அதிகரித்து கால்நடைகளுக்கு மடிநோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனால் பால் உற்பத்தி குறைந்து பண்ணையாளர்களுக்கு வருவாய் இழப்பினை ஏற்படுத்தும்.

**தீர்வுகள்:** கால்நடை மருத்துவரின் உதவியுடன் நுண்ணுயிர்க்கொல்லியினை உபயோகித்து மடிநோயினை குணப்படுத்தலாம். கிருமிநாசினியினை (பொட்டாசியம் பெர்மாங்கனேட் 1 சதவிகிதம்) தண்ணீரில் கலந்து தொடர்ந்து மடியினை சுத்தம் செய்ய வேண்டும். இதனை உபயோகிப்பதன் மூலம் தொற்றுக்கள் பரவுவதை தடுக்கலாம்.

மேற்கண்ட மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைபிடித்து மழைகாலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்து உற்பத்தியினை அதிகரிக்கலாம் என விவசாயப் பெருமக்களை கேட்டுக்கொள்கிறோம்.


**ஆசிரியர் குழு**

முனைவர் பெ.அழகேசன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
திரு.ப.பச்சியப்பன், விஞ்ஞானி (தோட்டக்கலை)
திரு.ச.சரவணக்குமார், விஞ்ஞானி (உழவியல்)
திருமதி. எம். சிவா, விஞ்ஞானி (மனையியல்)
திரு.ஆர்.டி. சீனிவாசன், விஞ்ஞானி (பயிர் பாதுகாப்பு)
திருமதி.ஏ. பிரேமலதா, விஞ்ஞானி (மண்ணியியல்)
மருத்துவர்.கே.கார்த்திக், விஞ்ஞானி (கால்நடை மருத்துவம்)
திரு.டி.ஜான்பிரபாகரன், (வேளாண் பொறியியல்)



முனைவர். பெ. அழகேசன்

முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்
வேளாண் அறிவியல் நிலையம் - MYRADA
272, பெருமாள் நகர், புதுவள்ளியாம்பாளையம் ரோடு, கலிங்கியம் அஞ்சல் - 638453
கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு
கைபேசி எண் : 9486077454, மின் அஞ்சல் : myradakvk@gmail.com, இணையதளம் : www.myradakvk.org